செய்தி வெளியீடு எண்:035 நாள் : 14.01.2015

## செய்தி வெளியீடு

நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பாக் வளைகுடா பகுதியினைச் சேர்ந்த மீனவர்கள், தங்களது பாரம்பரிய மீன்பிடிப்பு பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபடும்போது இலங்கை இராணுவத்தினரால் அவ்வப்போது கைது செய்யப்படுகின்றனர். இவ்வாறு தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும்போது, அவர்கள் விடுதலை செய்யப்படுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். கடந்த 2011 மே திங்கள் முதல், நாளது தேதிவரையில் 82 கடிதங்கள் வாயிலாக தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது மற்றும் கைது செய்யப்படுவதை தடுத்து நிறுத்திடவும், கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார்கள்.

நாகப்பட்டினம், புதுக்கோட்டை, மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்கள் தங்களுடைய பாரம்பரிய பாக் வளைகுடா மற்றும் மன்னார் வளைகுடா கடற்பகுதிகளில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது, கடந்த 8.11.2015 முதல் 05.1.2016 வரை இலங்கை கடற்படையின் தொடர் கைது நடவடிக்கைகளுக்கு ஆளாகி இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இதனையறிந்து மிகவும் துயரமுற்ற, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமது 20.11.2015, 26.11.2015, 29.11.2015, 18.12.2015, 20.12.2015, 31.12.2015 மற்றும் 5.1.2016 ஆகிய நாளிட்ட கடிதங்கள் மூலம் தமிழக மீனவர்கள் கைது பற்றிய விவரங்களை மாண்புமிகு பாரதப் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு சென்றார்கள். அக்கடிதங்களில், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டு இலங்கை சிறையில் வாடும் 104 அப்பாவி தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய இராஜாங்க ரீதியான நடவடிக்கைகளை மத்திய

அரசு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். அது மட்டுமன்றி, மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்கள், இந்நிகழ்வில் நேரடியாக தலையிட்டு அப்பாவி தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினரின் தொடர் கைது நடவடிக்கைகளை தடுத்து நிறுத்திட வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இடையறாத முயற்சிகளின் பயனாக, இலங்கை சிறையில் உள்ள நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை சார்ந்த 104 தமிழக மீனவர்கள் அனைவரையும் விடுவிக்க இலங்கை அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களில் முதற்கட்டமாக 55 தமிழக மீனவர்கள் இன்று இலங்கை நீதிமன்றங்களால் விடுதலை செய்யப்பட்டு அவர்கள் ஜாப்னாவிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மீதம் உள்ள தமிழக மீனவர்கள் இன்னும் ஓரிரு நாட்களில் விடுவிக்கப்படுவார்கள். விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் அனைவரையும் தமிழகம் அழைத்து வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

----

வெளியீடு – இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.

நாள் – 14.01.2016